1994 மார்ச் 18]

(அ) மற்றும் (ஆ) : நிதிப் பற்றாக்குறை காரணத்தால் மயிலாடுதுறை தொகுதி, மல்லியம்-வானாதிராஜபுரம் இடையில் நடைபாலம் அமைத்துக் கொடுக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

முற்பகல் 11-15

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லியத்திலிருந்து வானாதிராஜபுரம் வரையில் ஒரு கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது. அதன் நடுவே காவிரி ஆறு ஓடுகிறது. வானாதிராஜபுரம், மல்லியம், கோழிக்கூத்து, கடலங்குடி, ஆனை மேல்நகரம் போன்ற ஊர்களில் எல்லாம் இருக்கின்ற மக்கள் ஒரு கிலோ மீட்டர் தூரமே செல்ல வேண்டியிருப்பதற்குப் பதிலாக பஸ்ஸில் குத்தாலம் வரையில் 5 கிலோ மீட்டர் சென்று அங்கே இறங்கி அதன்பின் வேறு பஸ்ஸில் 5 கிலோ மீட்டர் சென்றால்தான் வானாதிராஜபுரம் செல்ல முடியும். மயிலாடுதுறை வழியாகச் செல்லவேண்டுமென்றால்கூட மயிலாடுதுறையிலிருந்து மல்லியத்திற்கு 6 கிலோ மீட்டர் வரை பஸ்ஸில் சென்று அங்கே இருந்து வானாதிராஜபுரத்திற்கு 7 கிலோ மீட்டர் தூரம் பஸ்ஸில் செல்லவேண்டும். ஆகவே மக்களுக்கு மிக அவசியம் என்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லாமல் அந்தப் பாலத்தின் குறுக்கே நடைப்பாலம் அவசியமாக இருக்கின்ற காரணத்தால் மக்களுக்குப் பயன்படும்படியாக அதைக் கட்டிக் கொடுக்கும்படி வேண்டிக் கேட்டுக்கோள்கிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்ற அந்தத் தரைப்பாலம் என்பதைப் பொறுத்தவரையில் காவிரி ஆற்றுக்குக் குறுக்கே கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டருக்கு மேலே போட வேண்டிய அவசியம் இருக்கின்ற காரணத்தால் இதற்குண்டான திட்ட மதிப்பீடு ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு சுமார் 35 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்ற காரணத்தால், தற்போது இருக்கின்ற நிதிப் பற்றாக்குறை காரணத்தால் அரசு இந்தத் திட்டத்தை உடனடியாக எடுத்துக் கொள்ளக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை என்ற காரணத்தால் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நடைப் பாலத்திற்கு 35 இலட்சம் ரூபாய் செலவாகாது என்று கருதுகிறேன். அதற்குப் பக்கத்திலே ஆஸ்பத்திரி பாலம் ஒன்று இருக்கிறது. அதாவது மயிலாடுதுறையிலிருந்து. அதற்குத்தான் 64 இலட்சம் ரூபாய் செலவழிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இங்கே மக்கள் ஒரு கிலோ மீட்டர் தூரமே செல்ல வேண்டியதற்குப் பதிலாக

பல பகுதிகளை எல்லாம் சுற்றிச் செல்லவேண்டிய சூழ்நிலை இருப்பதன் காரணத்தால் உடனடியாக இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள ஆவன செய்யப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வழங்கப்பட்டிருக்கிற துறையின் குறிப்பில் மல்லியம் - டு - வானாதிராஜபுரம், இடையில் இரு கிராமங்களை இணைக்கிற வகையில் காவிரி ஆற்றில் நடைப்பாலம் அமைக்க 35 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அது மட்டுமல்ல. அந்தப் பாலத்தை மட்டும் அமைப்பதல்ல. அந்தப் பாலத்திற்கு இடையே ஆர்.சி.சி. பைப் பாலங்களும் கட்டவேண்டி இருக்கிறது. அப்படி கட்டித் தண்ணீர் முறையாக செல்ல ஏற்பாடு செய்யவேண்டி இருக்கிறது. இதற்கான மதிப்பீடுகள் எல்லாம் இதிலே அடங்கி இருக்கிறது. ஆகவேதான் இதிலே குறிப்பிடப் பட்டுள்ளதுபோல் சுமார் 35 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் இதற்காகச் செலவழிக்கவேண்டி இருக்கிற காரணத்தால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நிதிநிலைமையை அனுசரித்து இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 39, திரு. இராம. இராமநாதன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

39—

கும்பகோணம் ஸ்ரீநகர் காலனியில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டுதல்.

* 21946— திரு. இராம. இராமநாதன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம், ஸ்ரீநகர் காலனி பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

1994 மார்ச் 18]

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் பகுதியில் வாழ்கிற மக்கள், அவர்களுடைய இடப்பற்றாக்குறை காரணமாக எக்ஸ்டென்ஷன் ஏரியா என்று சொல்லப்படுகிற ஸ்ரீநகர் காலனியில் பெரும்பான்மையாக வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பக்கத்திலே செக்காங்கண்ணி என்ற ஏரியா இருக்கிறது. அந்தப் பகுதியிலும் அதிகமாக மிகவும் கீழ்நிலையில் இருக்கின்ற மக்கள், கஷ்டப்படுகிற மக்கள் வாழ்கிற சூழ்நிலையில் நம்முடைய ஒப்பற்ற தலைவியும், இன்றைக்குத் தமிழகம் மட்டுமல்லாமல் இந்தியத் துணைக்கண்டமே எதிர்நோக்கிக் கொண்டிருக்கிற நம்முடைய ஒப்பற்ற தலைவியும், தமிழக மக்களுடைய காவல் தெய்வமும், எல்லோரையும் வாழ வைத்துக் கொண்டிருக்கிற வருமான மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில், இதனை மீண்டும் பரிசீலனை செய்து, நீங்கள் தயவு செய்து அந்தப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதையும், அதேபோல் அந்தப் பகுதியில் ராமன் அன்ட் ராமன் பார்க் என்ற பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியிலே இடம் கிடைக்காமல் இல்லை, அங்கே இடம் இருக்கிறது, அங்கே வாட்டர் சோர்சஸ் இருக்கிறது. எனவே, அந்தப் பகுதியில் மறுபரிசீலனை செய்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கும்பகோணம் நகராட்சியைப் பொறுத்தவரை அந்த நகராட்சியிலே இருக்கின்ற மொத்த மக்கள் தொகை சுமார் 1,53,000. இந்த நகராட்சியிலே குடிநீருக்கு என்று அபிவிருத்தித் திட்டம் எதுவும் தற்போது அரசினுடைய செயற்குறிப்பிலே இல்லை. இருந்தாலும்கூட இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிற அந்த அபிவிருத்தி திட்டத்தைக் கருத்திலே கொண்டே கும்பகோணத்தில் இருக்கின்ற ஸ்ரீநகர் காலனி பகுதி ஒரு தாழ்வான பகுதி என்ற காரணத்தினாலும் அதிகம் வளர்ந்து இருக்கின்ற நகரமாகி இருக்கின்ற காரணத்தினாலும் தற்போது அந்தக்குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு ஆய்வு செய்ய ஆணையிடலாம். அப்படி ஆணையிடுகின்றபோது நகராட்சியினுடைய நிதிநிலைமையையும் கணக்கில் எடுக்க வேண்டி இருக்கிறது. இதனால் கும்பகோணம் நகராட்சிக்கு சுமார் ரூ. 1,75,000 ஆய்வுக்காக மட்டும் தேவைப்படுகிறது. அப்படி ஒரு குடிநீர்த் திட்டத்தை எடுக்கிறபோது அப்படி நகராட்சியிலே நிதி நிலைமை சரியாக இருக்கும் என்றால் அதைப் பரிசீலித்து நகராட்சிக்கு ஒரு உத்தரவைப் பிறப்பித்து அந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு எந்த அளவுக்கு எடுத்துச்